## 95. கர்த்தர் என் வெளிச்சமானவர்

### பல்லவி

கர்த்தர் என் வெளிச்சமானவர்
கர்த்தர் என் இரட்சிப்புமானவர்
யாருக்கு பயப்படுவேன்
கர்த்தர் என் ஜீவனுமானவர்
கர்த்தர் என் பெலனுமானவர்
யாருக்கு அஞ்சிடுடேன்

### அனுபல்லவி

*நான் பயப்படேன் நான் அஞ்சிடேன் - 4*

### சரணங்கள்

1. என்னை பகைப்போரும் என்னை எதிர்போரும்
பொல்லாதவர்கள் என் மாம்சத்தை
அழிக்க என்னை நெருங்குவார்கள்
அவர்களே இடறி விழுவார்கள்
- நான் பயப்படேன்

2. எனக்கு விரோதமாக ஒரு பாளையம் இறங்கினால்
எனது இருதயம் கலங்கி போகாதே
என்மேல் யுத்தம் எழும்பினாலும்
உம்மில் நம்பிக்கையாய் இருப்பேன்
- நான் பயப்படேன்

3. என் தலையை சுற்றிலும் இருக்கின்ற
என் பகைவருக்கு என்னை மேலாக
உயர்த்துவீர் என்னை உயர்த்துவீர்
ஸ்தோத்திர பலியிட்டு உம்மை தொழுதிடுவேன்
- நான் பயப்படேன்